**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 430/2015**

**PW-6** **09.09.2021**

| | |
|---|---|
| **Name** | ஜான்கிளாடிஸ் |
| **Father's Name** | அந்தோணிராஜ் |
| **Village** | அச்சங்குளம் |
| **Taluk** | கயத்தார் |
| **Calling** | பொறியியல் பட்டதாரி |
| **Age** | 23 |

முதல் விசாரணை

நான் அச்சங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பொறியியல் பட்டதாரி ஆவேன். அ.சா.1,2 னை தெரியும். கடந்த 26.05.2015 ந்தேதியன்று காலை 9.30 மணியளவில் எங்கள் ஊரான அச்சங்குளத்திலிருந்து புளியம்பட்டி கோவிலுக்கு லாரியில் நானும் எங்கள் குடும்பத்தாரும் சென்றுகொண்டிருந்தோம். அந்தவாகனம் வேகமாக சென்றதால் நாங்கள் பயணித்த வாகனத்திலிருந்து கிழே தவறி விழுந்துவிட்டோம். என் அண்ணன் அந்தோணிராஜ் சார்லஸ் செல்வம் அருண் கிருத்துராஜ் லூர்து பிரான்சிஸ் சாலமன் ராஜா ஆகியோர்கள் தவறி கிழே விழுந்து விட்டோம். அந்த சம்பவத்தில் எனக்கு இடது தோள்பட்டையில் காயம் எற்பட்டது. சம்பவத்தின் போது எனக்கு மயக்கநிலைமையில் ஆகிவிட்டது என்னை திருநெல்வேலி அரசு மருத்துவ கல்லூரிக்கு அழைத்துசென்றார்கள் இச்சம்பவத்தில் காயப்பட்ட எனது அண்ணன் அந்தோனிராஜ் என்ற வின்செென்ட் மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும்போது சிகிச்சைபலனின்றி அன்றைய தினமே இறந்து விட்டார் மற்ற காயப்பட்ட நபர்களும் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றார்கள் இது சம்பந்தமாக போலிசார என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.

**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 430/2015**

**PW-7**

**09.09.2021**

| | |
|---|---|
| **Name** | ஆரோக்கிய சார்லஸ் செல்வம் |
| **Father's Name** | அந்தோணிசாமி |
| **Village** | அச்சங்குளம் |
| **Taluk** | கயத்தார் |
| **Calling** | இஞ்சினியர் |
| **Age** | 28 |

முதல் விசாரணை

நான் அச்சங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பொறியாளராக வேலை செய்து வருகிறேன். அ.சா.6 எனக்கு தெரியும். கடந்த 26.05.2015 ந்தேதியன்று காலை 9.30 மணியளவில் எங்கள் ஊரான அச்சங்குளத்திலிருந்து புளியம்பட்டி கோவிலுக்கு லாரியில் நானும் எங்கள் குடும்பத்தாரும் சென்றுகொண்டிருந்தோம். நாங்கள் சென்ற வாகனமானது பாலத்திலிருந்து ஒரு பள்ளம் இருந்தது அதை கவனிக்காமல் அந்த வாகனத்தை அதே வேகத்தில் ஒட்டுனரான எதிரி கிருஷ்ணமூர்த்தி ஒட்டிசென்றதால் வாகனத்திலிருந்து நாங்கள் தவறி விழுந்து விட்டோம். எனக்கு தலையில் அடிப்பட்டது யிருந்தது திருநெல்வேலி அரசுமருத்துவகல்லூரியில் மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை ரத்தினம் மருத்துவமனையில்15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சைபெற்றேன். மரியலூர்து அந்தோணி ராஜ் என்ற வின்செண்ட் மேற்படி விபத்தீல் காயப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அந்தோணிராஜ் ,ஜான்கிளாடிஸ், அருண் கிருத்துராஜ் லூர்து பிரான்சிஸ் சாலமன் ராஜா ஆகியோர்கள் தவறி கிழே விழுந்து விட்டோம். மற்ற காயப்பட்ட நபர்களும் உள்நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றார்கள் .இது சம்பந்தமாக போலிசார என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை இல்லை**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.

**In the Court of the Judicial Magistrate No.II,Kovilpatti**

**Deposition of Witness**

**CC 430/2015**

**PW-8**

**09.09.2021**

| | |
|---|---|
| **Name** | முருகேசன் |
| **Father's Name** | பூவன் |
| **Village** | அச்சங்குளம் |
| **Taluk** | கயத்தார் |
| **Calling** | விவசாயம் |
| **Age** | 56 |

முதல் விசாரணை

நான் அச்சங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு தேதி சரியாக ஞாபகம் இல்லை இந்த வழக்கின் சம்பவ இடத்தை கடம்பூர் உதவி ஆய்வாளர் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார்செய்தார். அந்த பார்வைமகஜரில் நான் 2 வதாக கையெழுத்து செய்தேன். அந்த பார்வைமகஜர் முழுவதும் அ.சா.ஆ 2 . இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் காயப்பட்டவர்கள் எங்கள் ஊர்காரர்கள் அவர்களை தெரியும். நான் விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் வைத்து ஒரு கையெழுத்து போட்டேன். அதிலுள்ள வழக்கு விபரம் எனக்குதெரியாது. இறந்துபோன நபர் எனது உறவினர் என்பதால் அவருக்குஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) M.S.சுப்பிரமணியன்
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.